தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-11-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## கார்த்திகைப் பட்டப் பயிர்களுக்கான விலை முன்னறிவிப்பு

தமிழ்நாட்டில் கொண்டைக்கடலை, கொத்தமல்லி மற்றும் கம்பு ஆகியன கார்த்திகைப் பட்டத்தில் பயிரிடப்படும் முக்கிய பயிர்களாகும் (நவம்பர் இரண்டாவது வாரம் முதல் விதைப்பு). விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருளுக்கு நல்ல விலை கிடைக்கும் வண்ணம் விதைப்பு முடிவுகளை எடுக்க உதவி புரிவதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் மேற்குறிப்பிட்ட பயிர்களின் விலைகளை ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு பரிந்துரைகளை செய்துள்ளது.

**கம்பு**

உலகளவில் கம்பு உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. இப்பயிர் மிகவும் வறட்சியான நிலைகளிலும் வளரக்கூடிய தானியங்களில் ஒன்றாகும். தற்போது கோழித் தீவனமாகவும் மற்றும் கால்நடைகளுக்கு பச்சைத் தீவனமாகவும் பயன்படுகிறது. கம்பு, இந்தியாவில் 2011-12ம் வருடத்தில் 8.39 மில்லியன் எக்டர் நிலத்தில் பயிரிடப்பட்டு 9.15 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்பட்டது. அதன் உறபத்தித்திறன் 1091 கிலோ, எக்டர் ஆகும். தமிழ்நாட்டில் கம்பு முக்கியமாக கார்த்திகை மாதத்தில் விதைக்கப்படுகிறது. நம் மாநிலத்தில் 2011-12ல் கம்பு 0.46 இலட்சம் எக்டரில் பயிரிடப்படட்டு 1.14 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. அதன் உற்பத்தித்திறன் 2453 கிலோ, எக்டர் ஆகும். விழுப்புரம் மாவட்டத்தில் கம்பு அதிக அளவில் அதாவது 12,823 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து தூத்துக்குடி, மதுரை, தேனி, திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் ஆகியன கம்பு உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். வர்த்தக தகவல்களின்படி கடந்த ஆண்டு (2012) மக்காச்சோளத்திற்கு நல்ல விலை கிடைத்ததால், இந்த ஆண்டு மக்காச்சோள சாகுபடிப்பரப்பு அதிகரித்துள்ளது. எனவே கம்பு பயிரிடும் பரப்பளவு குறைய வாய்ப்புள்ளது. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது கோவில்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 17 வருடம் நிலவிய விலைகளை ஆய்வு செய்தது. பிப்ரவரி – மார்ச் 2014 (மாசி- பங்குனி அறுவடையின் போது) கம்பு விலையானது ஒரு கிலோவிற்கு ரூ.13 வரை கிடைக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. தற்சமயம் 2013ல் கோவில்பட்டி சந்தையில் கம்பு விலையானது ஒரு

கிலோவிற்கு ரூ.14-15 ஆக உள்ளது. இந்த விலையின் அடிப்படையில் விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**கொண்டைக்கடலை**

கொண்டைக்கடலையானது பயறு வகைகளில் மிக முக்கியப் பயிராகும். உலகளவில், 2011-12-ல் சுமார் 12.14 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு, 11.30 மில்லியன் டன்கள் கொண்டைக்கடலை உற்பத்தி செய்யப்பட்டது. கொண்டைக்கடலையில் நாட்டு இரகம் மற்றும் காபூலி இரகம் என இரண்டு இரகங்கள் உள்ளன. இவ்விரண்டு வகை கொண்டைக்கடலைகள் முறையே, உற்பத்தியில் 80 மற்றும் 20 சதவீதப் பங்கீட்டை கொண்டுள்ளன. உலகின் மொத்த கொண்டைக்கடலை உற்பத்தியில், இந்தியாவின் பங்கானது 70 சதவீதமாகும். இந்தியாவின் மொத்த உற்பத்தியான 7.58 மில்லியன் டன்களில், மத்தியப்பிரதேசம் 45 சதவீத கொண்டைக்கடலையை உற்பத்தி செய்து முதலிடத்திலும், இராஜஸ்தான், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களையும் வகிக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள், இலங்கை மற்றும் மலேசியா நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து இக்கடலையானது சிறிய அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் இப்பயிரானது கார்த்திகைப் பட்டத்தில் மட்டும் பயிரிடப்படுகிறது. 2011-12 இல் 8,592 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 5,520 டன்கள் கொண்டைக்கடலை உற்பத்தி செய்யப்பட்டது. திருப்பூர் மாவட்டம் கொண்டைக்கடலை உற்பத்தியில் முதலாவது இடத்தை வகிக்கிறது. 2011-12 ல் 3,300 எக்டர் நிலப்பரப்பில் கொண்டைக்கடலை இம்மாவட்டத்தில் பயிரிடப்பட்டது. இதற்கு அடுத்தபடியாக தருமபுரி மாவட்டம் உள்ளது. உடுமலைப்பேட்டை சந்தையானது, கொண்டைக்கடலை விற்பனைக்கு மிக முக்கியமான சந்தைகளில் ஒன்றாகும். கடந்த பத்து வருடங்களில் அங்கு நிலவிய விலை விவரங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்ததில் பிப்ரவரி முதல் மார்ச் வரை கொண்டைக்கடலை விலை குவிண்டாலுக்கு ரூ.4000 ஆக இருக்குமென கண்டறியப்பட்டுள்ளது. உடுமலைப்பேட்டை சந்தையில் தற்போதைய விலையானது குவிண்டாலுக்கு ரூ.4450 ஆக உள்ளது. மேலும் கடந்த வருடத்தில் அறுவடை சமயத்தில் விலையானது குவிண்டாலுக்கு ரூ.3600 ஆக இருந்தது. இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ள இவ்விலையை அடிப்படையாகக் கொண்டு விவசாயப் பெருமக்கள் தங்களது விதைப்பு முடிவுகளை மேற்கொள்ளுமாறு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள, வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் கேட்டுக்கொள்கிறது.

**கொத்தமல்லி**

மிக முக்கிய நறுமணப் பயிரான கொத்தமல்லியின் விதை மற்றும் இலையானது இந்திய உணவுத் தயாரிப்பில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்தியாவில் இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், ஒடிஸா, தமிழ்நாடு மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகியன கொத்தமல்லி பயிரிடும் முக்கிய மாநிலங்களாகும். அமெரிக்கா, இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இந்தியாவில் இருந்து கொத்தமல்லி ஏற்றுமதி செய்யப்படுகிறது. கொத்தமல்லி விதை தவிர, இந்தியாவிலிருந்து அதன் பொடி மற்றும் அத்தியாவசிய எண்ணெய் ஆகியனவும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் 2011-12ல் கொத்தமல்லி 10,804 எக்டரில் பயிரிடப்பட்டு

5,049 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் அதிக அளவில் 3,975 எக்டரில் பயிரிடப்படுகிறது. அதனைத் தொடர்ந்து சிவகங்கை, இராமநாதபுரம், பெரம்பலூர், ஈரோடு மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் கொத்தமல்லி சுமார் 91 சதவீதம் மானாவாரியாகப் பயிரிடப்படுகிறது. விருதுநகர் சந்தையில் பிப்ரவரி –மார்ச்சு 2013ல் கொத்தமல்லி விலையானது குவிண்டாலுக்கு ரூ.5,600ஆக இருந்தது. கொத்தமல்லியின் தற்போதைய விலையானது குவிண்டாலுக்கு ரூ.10,000 ஆகும். உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையத்தின் ஆய்வின்படி கார்த்திகையில் விதைத்து மாசி- பங்குனி 2014-ல் அறுவடையின் போது கொத்தமல்லிக்கு விலை குவிண்டாலுக்கு ரூ.8500 ஆக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. கொத்தமல்லியைப் பொறுத்தவரை விதைகள் பொன் நிறமாக இருக்கும் பருவத்தில் அறுவடை செய்தால் நல்ல விலை கிடைக்கும். இந்த விலையின் அடிப்படையில் விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:</u>**


1. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
   வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
   தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
   கோயம்புத்தூர்-641003,
   தொலைபேசி- 0422-2431405.


**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:</u>**


1. பேராசிரியர் மற்றும் தலைவர், பயறுவகைத் துறை,
   தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
   கோயமுத்தூர்-641003.
   தொலைபேசி 0422-2450498.
2. பேராசிரியர் மற்றும் தலைவர்,
   வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை,
   தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
   கோயம்புத்தூர்-641003.
   தொலைபேசி- 0422-6611284.
3. பேராசிரியர் மற்றும் தலைவர்
   சிறுதானியங்கள் துறை,
   தாவர இனவிருத்தி மற்றும் மரபியல் மையம்,
   தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
   கோயம்புத்தூர்-641003.
   தொலைபேசி- 0422-2450507.


மக்கள் தொடர்பு அலுவலர்